853

கும்பகோணம் விவசாய சங்கத்தின் மாஸாந்திரப் பத்திரிகை.

வாலியம் 13] 1919-ஞு செப்டெம்பர் & அக்டோபர்மீ [நெ. 9 & 10

MONTHLY JOURNAL OF 8 PAGES

EDITED BY

Mr. R. Srinivasa Iyengar B. A., and Mr. A. Subramania Iyer, B.A.

Annual Subscription is One Rupee. Post Free.

சங்கத்தின் மீட்டிங்கு.

சங்கத்தின் நிர்வாக கமிட்டியாரின் மீட்டிங்கு அக்டோபர்மீ 21 தேதி மாலை 6—30 மணிக்கு போர்ட்டர் டவுன்ஹாலில் நடைபெற்றது. சங்கத்தின் அக்ராசனாதிபதியும் டிப்டி கலெக்டருமான மிஸ்டர் V. S. அஸ்வத்த ஐயர் B. A. அக்ராசனம் வகித்தார். அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன.

1. 1918-ஞு ஜூலைமீ முதல் 1919-ஞு ஜூன் வரையில் உள்ள நடைமுதல் கணக்குகள் அங்கீகரிக்கப்பட்டன.

2. 1918 ஜூலை முதல் 1919 ஜூன் மாதம் முடிய ஒருவருஷக் கணக்கை யாதொரு ஜிலவின்றி பரிசோதனைசெய்ய மிஸ்டர் T. S. சுப்பிரமணிய ஐயர் B. A. B. L. L. T. யை ஆடிட்டராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

3. எட்டுப்பேர்கள் நிர்வாககமிட்டியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்

4. சங்கத்தின் மாதாந்திர பத்திரிகையில் விளம்பரங்கள் பிரசுரிக்கவும் அதற்கு சார்ஜை ஆபீஸ் உத்தியோகஸ்தர்களே நிர்ணயிக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

5. விவசாயப் புத்தகச்சாலை ஒன்றை வைக்கவும், அதில் என்னென்ன புஸ்தகங்களை வாங்கிவைக்கவேண்டுமென்று மெம்பர்களிடமிருந்து பிரரேபனைகளை வாங்க முயற்சிகள் செய்யப்படவேண்டும்என்று தீர்மானிக்கப்பட்டது. இத்துடன் அக்ராசனருக்கு மிஸ்டர் M. S. ரெங்கசாமி ஐயரால் வந்தனங்கூறி மீட்டிங்கு கலைந்தது.

பாய்ச்சல் வசதியே முதல்தர எருவாகும்.

வில்வராயநல்லூர் பாரி மிராசுதாரும் நமது சங்கத்தின் நிர்வாகக் கமிட்டி மெம்பருமான ஸ்ரீமான் S. பூபால உடையார் நமக்கு பின்வருமாறு எழுதுகிறார்:—

பாய்வாய்க்கால் வடிவாய்க்கால் இரண்டும் உள்ள ஒரு கட்டளை நஞ்சையில் பாய்வாய்க்கால் வெட்டாமல் வடிவாய்க்காலை வெட்டி பாய்ந்து வந்த நிலைமையில் முதல்மடை கடைமடையாகவும் கடைமடை முதல் மடைப்பயிராகவும் போய்விட்டதுவயல்களிலும் அனர்தாக்கிச்சில இடங்கள் பயிர்க்ஷீணித்தும் போய்விட்டது சேரில்கண்ட எனது அனுபவம்.

இப்போர்ப்பட்ட நஞ்சைகளில் இப்படி வசதிக்குறைவானகாலத்தில் அதாவது வாய்க்கால் வெட்டுமுதலிய மாராமத்துவேலை குறைவாகச் செய்யப்படுகிறபொழுது எரு, கிடை ஜாஸ்தியாகப் போட்டு சாகுபடி செய்தாலுங்கூட மாசூல் குறைவாகவேதான் ஏற்படுகிறது. இதனால் பாய்ச்சல் வசதிகுறைவினால்தான் உண்டாகிறது என்பது திண்ணம். ஆகையால் மிராசுதார்கள் தங்கள் தங்கள் சாகுபடியில் எருவிடும் விஷயத்தில் காட்டும்கவலையைவிட, பாய்ச்சல் வசதிக்கான சாதனங்களை உண்டாக்கிக்கொள்வதில் அதிக அக்கரை எடுத்துக்கொள்ளவேண்டியது இதனால் அவசியமாகிறது. என்னுடைய நிதர்சன அனுபவத்தால் பாய்ச்சல் வசதியானது எருவைக்காட்டிலும் மேன்மை என்று புலப்படுகிறது.

புண்ணாக்கு வகைகளை ஏற்றுமதி செய்யாது தேசத்திலேயே நிறுத்திக்கொண்டு முன்னிலும் அதிகமாக உபயோகிக்கவேண்டும் என்பதற்கு நியாயம்.

ஜூலை ஆகஸ்டு 40-வது பக்கதொடர்ச்சி.

தென்னார்க்காடு ஜில்லாவில் புண்ணாக்குகளை, கரும்பிற்கும் நெல்லிற்கும விசேஷமாய் எரு வைக்கிறார்கள். இந்த ஜில்லாவில் செவ்வல் நிலங்களாயுள்ள புஞ்சை பூமிகளில் விளையும் வேர்க்கடலை பூராவும் விற்றுவிடுகிறார்கள். இந்த நிலங்களின் விளைவு குறைவுபடாதவண்ணம் தொழு எரு எவ்வளவு அகப்படுகிறதோ அவ்வளவையும் கொண்டுபோய் போடுகிறார்கள். இதனால் நஞ்சைகளுக்கு மாட்டெரு என்பதே கிடையாது. நஞ்சை நிலங்களின் வளம் குறையாதபடி வேர்க்கடலைப்புண்ணாக்கை காணிக்கு ஒரு பாரமாக உரம் போடுகிறார்கள். இது ஒரு நல்ல வழக்கம். செவ்வல் நிலங்கள் பூராவும் வானம் பார்த்தவைகள். மாட்டெரு போடும்போது ஒரு வருஷம் மாசூல் விளையாத போனாலும் மோசமில்லை. இவ்வெருவின் சத்து ஒரு போகத்தோடு ஒழிந்துபோகாது. அநேகமாக அடுத்த போகத்திற்குமிருக்கும். வேர்க்கடலை புண்ணாக்கு கரைந்துபோகக்கூடியதும் விலைபெற்றதாகவுமிருப்பதால் கட்டாயம் அதே போகத்தில் நன்றாய் விளையும் என்னும் நம்பிக்கையிருப்பதால் நஞ்சை நிலங்களுக்கு உபயோகிக்கிறார்கள். உரமெல்லாம் நெற்பயிரே உட்கொள்ளுமென்றும் எருவிற்குப்போட்ட பணம் குறித்த காலத்திற்குள்ளே திரும்ப ஆதாயத்தோடு வந்துவிடுமென்றும் உறுதி குடியானவனுக்குண்டு.

கோதாவரி, தென்னார்க்காடு ஜில்லாக்களில் கரும்பிற்கெல்லாம் மூத்துக்கொட்டைப் புண்ணாக்கை ஏக்கருக்கு 4 அல்லது 5 பாரம் வைக்கிறார்கள். இதை சாதாரணமாய் நட்டபின் மேல் எருவாக கொஞ்சத்தை முதல் முதல் மண்ணணைக்கும்போதும், மீதத்தை கடைசியாய் மண்ணணைக்கும்போதும் வைக்கிறார்கள். விவசாய டிபார்ட்மெண்டில் சோதனைகள் செய்து பார்த்ததில் மாட்டெருவை ஏராளமாய் போட்ட

பயிரைக்காட்டிலும் புண்ணாக்கு வைத்தபயிரே அதிகமாசூல் கொடுக்கிறதென்பது தெரிகிறது. கரும்பு எல்லாம் ஒன்றுபோல் ஏககாலத்தில் முதிர்ந்து ஆகிற வெல்லமும் நல்ல மாதிரியா யிருப்பதோடு கண்டுமுதலும் அதிகமாய்க்காண்கிறது.

கோயம்புத்தூரிலிருக்கும் ஸெண்ட்ரால் பாரத்தில் (பெரியபண்ணையில்) தோட்டப்பயிர் (இறவைப்பயிர்) எல்லாவற்றிற்கும் புண்ணாக்குரம் வைப்பதில் லாபம் என்று கண்டறியப்பட்டிருக்கிறது. ஈரோட்டுக்கருகிலுள்ள காவிரி யடுத்த பிரதேசங்களிலுள்ள குடிகள் சென்ற சில வருஷங்களுக்குள்ளே புண்ணாக்கின் குணத்தை யறிந்துகொண்டு மஞ்சள், வாழை, கரும்பு முதலியவை பயிர்களுக்கெல்லாம் விசேஷமாய்ப் புண்ணாக்குரம்போட்டு வருகிறார்கள்.

மேற்கண்ட சில உதாரணங்களிலே சென்னை ராஜதானியிலுள்ள குடியானவர்கள் பலருக்கு புண்ணாக்கெருவின் குணம் தெரிந்திருக்கிறதென்று தெரிகிறதாலும், புண்ணாக்கு தற்காலம் மிகவும் சவதமாயிருப்பதாலும் இன்னும் பலரும் புண்ணாக்கை வாங்கி எருவாகப்போட்டு சோதனைபார்த்து மேற்சொன்னவைகளின் உண்மைகளை தாங்களே நேரில் கண்டறிந்துகொள்ளுவார்களென்று எண்ணுகிறோம். தவிர சௌகரியப்பட்டால், புண்ணாக்கு வாங்கிப்போடுகிற செலவிற்கும் அதனால் விளையும் அதிக மாசூலிற்கும் உள்ள லாபநஷ்டத்தைக் கணக்குப்போட்டும் பார்த்துக்கொள்ளலாம். பின்னிட்டும் புண்ணாக்கு என்னமட்டும் விலைகொடுத்து வாங்கிப்போட்டால் கட்டுபடியாகுமென்றும் கண்டறிந்துகொள்ளலாம்.

புண்ணாக்கு வாங்கிப்போட்டால் கட்டும் என்கிற விஷயமட்டுமல்ல அநேகம் சமுசாரிகள் மாட்டெரு சல்லிசு என்று சொல்லுகிறார்கள். அதை இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால் மாட்டெரு இருப்பதே கொஞ்சம். அநேகருக்குத் தங்கள் சொந்த நிலத்திற்கே எல்லாவற்றிற்கும் போடப்பற்றாது.

பற்றாதபடி எரு விடுவதைப்போல் விவசாய அபிவிருத்திக்குக் கேடுவேறொன்றில்லை. எருவிற்குப் போடும் பணத்திற்கு போதுமான ஆதாயம் விளைவில் கண்டுகொண்டிருக்கும் பரியந்தம் எல்லாவகையிலும் கிடைக்கக்கூடியவைகளை வாங்கிப்போடாதிருக்க நியாயமில்லை. இறவைப் பயிர்களுக்கும் நஞ்சைக்கும் கட்டாயம் இந்தப்படி பார்க்கவேண்டும். இவைகளுக்காகும் (முட்டுவழி) செலவிலே நீர்க்கூலியும், இறவைப் பயிர்களுக்கு இறைப்பிற்குப் பிடிக்கும் செலவும் ஜாஸ்தியாயிருக்கும். ஆகையால் குறைவான மாசூல் கண்டால் கட்டுபடியாகாது. அநேகமாய் நஷ்டமே வரும். எருவிற்குப்போடும் பணம் வட்டிக்குப்போட்ட பணம் போலே எருவை வைப்பதற்கு அதிகம் செலவாய்விடாது. அதனால் முட்டுவழி (தசைகூலி) உயர்ந்துபோகாது. மாசூல் அதிகம் காண்கிறதால் அறுவடையில் செலவு கொஞ்சம் ஏறலாம். பயிர் நன்றாயிருந்தாலும் சரி கெட்டிருந்தாலும் சரி உழவு, விதைப்பு, களையெடுப்பு, இறைப்பு எல்லாம் ஒன்றுபோல்தானிருக்கும்

இதுமட்டுமல்ல. சில பயிர்களுக்கு ஏராளமாய் உரம் வைக்கவேண்டும். மாட்டெரு தவிர வேறொன்றுமில்லையென்றால் ஒருவனிடத்திலிருக்கிற எருவெல்லாம் சேர்த்தாலும் மற்ற பாகங்களுக்கெல்லாம்

போடலாம் ஏதோ ஒரு சுருக்கமான பாகத்திற்கு மட்டும் காணும். சரிதான், மாட்டெருவெல்லாம் சேர்த்து ஒரு கரும்புப்பயிருக்கு எருவிட்டு 200, 300 ரூபா லாபமடைவதாய் வைத்துக்கொள்ளுவோம். இந்தப்படி கரும்பில் லாபம்வர மற்றப்பயிருக்கெல்லாம் எருவிடாமல் பட்டினி போட்டதால் மாசூல் குறைந்துபோனதால் வருகிறநஷ்டத்திற்கு என்ன செய்கிறது ஒரு 75 ரூபாபோல் செலவழித்து முத்துகொட்டை புண்ணாக்கு வாங்கிப் போட்டுவிட்டு இருக்கிற தொழு எருவை மற்றப் பயிர்களுக்குப் போட்டிருந்தால் நல்ல லாபமாயிருக்கும.

புண்ணாக்குகளை உரமாய்ப் போடுமுன் செவ்வையாய் தூள்செய்து போடவேண்டும். இது காரணமுள்ளதானதால் எங்கும் ஒன்றுபோல் சிதறவேண்டும். புண்ணாக்கைத் தண்ணீர்விட்டு ஊறவைத்து மிச்சத் தண்ணீரை வடித்து விட்டு சாம்பலைக் கொஞ்சம் சேர்த்து நன்றாய் உதிரும் பக்குவம் வரும்வரை கலந்துகொடுத்து பின் எடுத்து உபயோகப்படுத்தினால் எங்கும் ஒன்றுபோல் சிதறுவது சுலபமாயிருக்கும். சாம்பல் சேருவதினால் எருச்சத்தும் அதிகப்படும்.

சர்க்கார் பண்ணை அநேகத்தில் பருத்தி விதையோடு வேர்க்கடலை புண்ணாக்கை கலந்து கால்நடைகளுக்கெல்லாம் கொடுத்துவருவதில் அதிக சிலாக்கியமாயிருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில் ஜனங்கள் நாளுக்குநாள் அதிகமாகவே இதை மாடுகளுக்குத் தீனியாய் உபயோகித்துவருகிறார்கள். இது மடித்துக் காரிப்பாகாமலிருக்கிற சரக்காகப் பார்த்து வாங்கவேண்டும். மடிசல் சரக்கை ஆடுமாடுகள் சரியாய்த் தின்னாது.

நோய் அல்லது வேறொரு வழியாய் புண்ணாக்கு உரமாய் உபயோகப்படுத்தும் விதம் ஒன்றுமிருக்கிறது. வேலைசெய்யும் கால்நடைகளுக்கு உணவாக உபயோகப்படுத்தி, அதன் மூலமாய் எரு சத்துள்ளதாகும்படி செய்துவருவதுதான். விலைபெற்ற மாடுகளுக்குப் பருத்திக்கொட்டையும் கொள்ளும் (காணமும்) கலந்து கொடுக்கிறார்கள். இதில் கொஞ்சத்திற்குப் பதிலாக மணிலாக்கொட்டைப் புண்ணாக்கைச் சேர்த்துக்கொண்டால் செலவு சுளுவாகும். பருத்திக்கொட்டையைப் பூராவும் தள்ளி அதற்குப் பதிலாகப் புண்ணாக்கைச் சேர்த்துக்கொள்ளுவது சரியல்ல. ஏனெனில் புண்ணாக்கு ரொம்ப சத்துள்ளதானதால் அதிகம் சேர்த்தால் உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாது. பாதி புண்ணாக்கும் பாதி பருத்தி விதையுமாகச் சேர்த்துக்கொடுத்தால் ஒத்துக்கொள்ளும்.

H. C. சாம்ஸன்,
விவசாய டிப்டி டைரெக்டர், 5, 7 சர்க்கில் கோயமுத்தூர்.

குறிப்பு.

லாண்ட் இம்ப்ருவ்மெண்டு லோன்ஸ் ஆக்ட் (Land Improvement Loans Act) என்கிற நிலவிர்த்திக்கடன் சட்டப்படி, கிணறு குளங்கள் (ஏரிகள்) வெட்டவும், சீர்திருத்தவும், தரிசு நிலத்தை செய்கால் செய்யவும், விவசாயத்திற்காக நிலத்தின் குத்தகையின் மதிப்பை அதிகரிப்பதற்காக செய்யவேண்டிய வேலையைச் செய்யவும் சர்க்காரார் கடன்

கொடுக்கிறார்கள். விவசாயிகளுக்கு கடன் கொடுக்கிற சட்டப் (Agriculturists Loans Act) படி சர்க்காரார் விதைகள், உழவுமாடுகள், பொலிகாளைகள், இன்னும் மாடுகளுக்கு தீவனம் வாங்கவும், கரும்பு ஆலைகள் வைக்கவும், நீலம் செய்யும் தொட்டிகள் இன்னும் இவைபோன்ற உபகரணங்களை ஏற்படுத்திக்கொள்ளவும் இரட்டைக்கவலைகள், நீர் இறவைக்கு வேண்டிய சாதனங்களை வாங்கிக்கொள்ளவும் வீடுகட்டவும் பயிர் செய்யவும் விடப்படுகிற இடங்களில் கிருஷிகர்கள் வீடுகள் கட்டிக்கொள்ளவும், இன்னும் இவைபோன்ற விவசாய சம்பந்தமான இதர விஷயங்களுக்காகவும் கடன் கொடுக்கிறார்கள். இதற்கு வட்டி 100 ரூபாய்க்கு வருஷத்திற்கு $6\frac{1}{4}$, இதற்கு வேண்டிய மனுபாரங்கள் எல்லா சர்க்கார் (ரிவினியூ) கச்சேரிகளிலும், ரிவனியூ இன்ஸ்பெக்டரிடத்திலும் விலையில்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.

ஆட்டுமந்தையை நன்றாய் வைத்து வளர்ப்பதில் கவனிக்கவேண்டிய சாதாரண குறிப்புகள்.

அதிகப் பணச்செலவன்றியில் இந்துதேச விவசாயத்தையும் ஆடுமாடுகளையும் சில சுலபமான வழிகளால் ஏராளமான விருத்திக்குக் கொண்டுவந்து லாபத்தையடையலாம். ஆனால் இதுவிஷயம் பொதுவாக ஜனங்களுக்கு தெரிந்ததாகவில்லை.

இதன் கீழ், ஆட்டுமந்தை வைத்து வளர்ப்பதில் எவ்வளவு விருத்தி பண்ணி லாபம் அடையலாம் என்று காண்பிக்கிறோம்.

ஆட்டுமந்தை வைத்து வளர்ப்பதில் கவனிக்கவேண்டிய விஷயம் இரண்டு:

முதலாவது மந்தையில் உள்ள ஒவ்வொரு ஆட்டையும் தெரிந்தெடுத்து நன்றாய்ப் போஷணை செய்யவேண்டும்.

இரண்டாவது மந்தை மொத்தமும் சிரத்தையோடு பார்த்துப் பராமரிப்பதற்குவேண்டிய ஏற்பாடுகளும் செய்யவேண்டும்.

நல்ல வர்க்கங்களாய் உள்ள ஆடுகளைச்சேர்ப்பதினால் மாத்திரம் போதாது. சரியான மேற்பார்வை இல்லாவிடில் மந்தை கெட்டுப் போகும். ஆனால் நல்ல பராமரிப்பு மாத்திரமும் இருந்தாலும் போதாது. ஜாதிகளும் நன்றாய் இருப்பதும் அவசியம். மேற்சொன்ன இரண்டு விஷயங்களைக் கவனிப்பதால் மந்தையின் மொத்த மதிப்பும் அடையக்கூடிய லாபமும் அதிகரிக்கும்.

இவ்விதமான விருத்தி அடைவதற்கு ஆட்டின் சொந்தக்காரன் மந்தையோடேயே எப்பொழுதும் வசித்துக்கொண்டிருக்கவேண்டும். மேலும் அவன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஆட்டையும் கவனித்துப் பார்த்து இன்ன ஆடு இன்னதென்று குறிப்பிடவும் நல்ல லட்சணங்கள் பொருந்திய ஆட்டைத் தெரிந்து கண்டுகொள்ளக்கூடியவனாயும் இருக்கவேண்டும்.

தென்னிந்தியா ஆட்டிடையர்களுக்கு ஏற்கனவே இந்த விஷயங்கள் தெரியும். அவர்கள் எப்பொழுதும் ஆடுகளுடன் திரிவதனால் அவைகளை ஒவ்வொன்றாய்க் குறிப்பிடவும் தனது மந்தையில் உள்ள நல்ல ஆட்டைப்பொறுக்கி எடுக்கவும் திறமையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் மந்தைகள் ஒருவன் பார்வைக்கு அவ்வளவு சிரேஷ்டமாய்த் தோற்றவில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. இவற்றுள் இடையர்கள் தாமே நீக்கிக்கொள்ள முடியாதவை சில இருந்தபோதிலும், அவர்களாலேயே முடியக்கூடியவை சில இருக்கின்றன. இவற்றை கீழே விவரிக்கிறோம்.

நம் இராஜதானியில் உள்ள ஆட்டுமந்தைகளிலுள்ள ஆடுகள் ஒரே மாதிரியான அங்க அடையாளங்களை உடையனவாயாவது, அல்லது ஒரே ஜாதி ஆடுகளாயாவது இருப்பதே இல்லை. ஒரே மந்தையில் இரண்டு மூன்று ஜாதிகள் கலந்திருப்பது வெகு சாதாரணம். இப்படி இருப்பது சரியே அல்ல.

இவ்விராஜதானியில் ஆடுகள் முக்கியமாய் "செம்மறியாடு" "குறும்பாடு" என இருவகைப்படும். செம்மறியாட்டிலிருந்து எரு, தோல், மாமிசம் இம்மூன்றும் கிடைக்கின்றன. குறும்பாட்டிலிருந்து இம்மூன்றோடு கம்பளிரோமமும் கிடைக்கின்றது.

செம்மறியாட்டின் மாமிசம் குறும்பாட்டின் மாமிசத்தைவிட நல்லது. கம்பளிக்காக, குறும்பாட்டுமந்தை வைத்து வளர்த்தால் அக்குறும்பாட்டு மந்தையுடன் செம்மறியாட்டைக் கலப்பது தப்பு. அப்படிச் செய்வதனால் குறும்பாட்டின் கம்பளி ரோமம் குறைவதுடன் அவ்வளவு நேர்த்தியாயும் இராது. இதுபோலவே செம்மறியாட்டு மந்தையுடன் ஒன்று இரண்டு குறும்பாட்டைக் கலப்பதனாலும் யாதொரு லாபமும் இல்லை.

குறும்பாட்டில் பலவகையுண்டு:
கறுப்பு ரோமமுள்ளது.
வெளுப்பு ரோமமுள்ளது.
சிவப்பு ரோமமுள்ளது.
இவை மூன்றும் கலந்துள்ளது.

குறும்பாட்டில் செம்மறியாட்டைக் கலப்பதனால் சிவப்புரோமமுள்ள குறும்பாடுகள் உண்டாகின்றன. கறுப்பு ரோமமும் வெளுப்பு ரோமமுள்ள குறும்பாடுகளைக் கலப்பதனால் கலப்பு ரோமமுள்ள குறும்பாடுகள் உண்டாகின்றன. கம்பளி ரோமம், ஒன்று கறுப்பாயாவது அல்லது வெளுப்பாயாவது இருக்கவேண்டும்.

ஹகரி சர்க்கார் விவசாய பண்ணையில் பரீக்ஷை பார்த்ததில், கறுப்புக்கம்பளி ரோமமுள்ள ஆடுகளைமட்டும் வைத்து வளர்த்தால் பிறக்கும் குட்டிகள் கறுப்பாகவே பிறக்கின்றன. வெளுப்புக்கம்பளி ரோமமுள்ள ஆடுகளைமட்டும் வைத்து வளர்த்தால பிறக்கும் குட்டிகள் வெளுப்பாகவே பிறக்கின்றன. இவைகளில் காதுகளின் நுனிகள் சற்றே கறுப்பாக இருந்தபோதிலும் குட்டிகள் என்னமோ வெளுப்பாகவே பிறக்கின்றன.

ஆகவே மந்தைகளை விருத்தி செய்வதில் முதல் முதல் கவனிக்க வேண்டிய விஷயம் ஜாதிகளைக் கலப்பில்லாமல் சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டும்.

மந்தையினின்று கம்பளிரோமம் கிடைக்கவேண்டுமென்ற எண்ண முள்ளவர்கள் செம்மறியாட்டை அடியோடே விலக்கிவிடவேண்டும்.

தவிரவும், கறுப்புக் கம்பளி ரோமம் மட்டும் வேண்டுமானால் பூரா வும் கறுப்பு ரோமமில்லாத ஆடுகளை நீக்கிவிடவேண்டும். வெள்ளை ரோமம் வேண்டுமானால் மேற்சொன்னபடி வெள்ளைரோமமுள்ள ஆடு களைமட்டும் வைத்து வளர்க்கவேண்டும்.

உடல் முழுமையும் வெள்ளையும் முகம் மட்டும் கறுப்பாயுமுள்ள குறும்பாடுகளைக் கூட்டி வளர்ப்பதால் பிறக்கும் குட்டிகள் எல்லாம் வெள்ளையாயே இருப்பதில்லை. சில சுத்தக்கறுப்பாயும், சில சுத்த வெள்ளையாயும், சில மந்தையிலுள்ள ஆட்டைப்போல வெளுப்புடனும் கறுப்பு முகமுமுள்ளதாயும் ஒன்றிரண்டு கறுப்பு வெள்ளை கலந்தும் பிறக்கின்றன.

கம்பளி ரோமம் வேண்டாத பக்ஷத்தில் குறும்பாடுகளை மந்தையி லிருந்து நீக்கிவிடவேண்டும்.

மேற்சொன்ன விஷயம் தவிர மற்றொன்றும் கவனிக்கவேண்டிய துண்டு. மேய்ச்சல் ஏராளமாய்க் கிடைக்கும்பொழுது நல்லதீனியைத் தின்று சீக்கிரமாய் வளர்ந்து கொழுக்காத ஆடுகளை நீக்கிவிடவேண்டும். குறும்பாடானாலுமே செம்மறியாடானாலுமே குட்டிகளை விற்பனைக்குக் கொண்டுபோகும் காலத்தில் அவை குறைந்தது 60 அல்லது 70 பவுன் நிறையுள்ளவையாய் இருக்கவேண்டும். அதற்குக் குறைந்து 40, 50 பவுன் நிறையுள்ள குட்டிகளினால் விசேஷ லாபமில்லை. அதிக நிறை யுள்ள குட்டிகளுக்கு விலை அதிகம். தனது மந்தையிலுள்ள ஆடுகளுக்கு கிடைக்கும் தீனி ஒரே விதமாய் இருந்தபோதிலும் சில ஆடுகள் மட்டும் அத்தீனியினால் மற்றவைகளைவிட நன்றாய் வளர்ந்து கொழுத்தும், ரோமம் அதிகமாயும் இருப்பதுடன், குட்டிகளுக்கு ஜாஸ்தி பால் கொடுத்து அவைகள் சீக்கிரமாய் வளர்கின்றன வென்பது ஆட் டிடையர்கள் ஒவ்வொருவருக்கும் தெரிந்த விஷயமே.

மேற்சொன்ன குணங்களையுடைய ஆடுகளின் கிடாய்க்குட்டிகளை மட்டுமே பொலிச்சலுக்காக என்று தெரிந்துவைக்கவேண்டும். இவைகள் நன்றாய் வளர்ந்து சுறுசுறுப்பாய் நல்ல தோற்றமுடன் இருப்பதோடும் கூட ஜாஸ்திகம்பளி ரோமம் கொடுக்கக்கூடியவையாயும் இருக்கவேண் டும். ஒவ்வொரு வருஷமும் அவ்விதமே பொறுக்கி சேர்த்துக்கொண்டு வந்தால் மந்தை நாளாவர்த்தியில் நிலையான அபிவிருத்தியடைந்து நல்ல லாபத்தையும் கொடுக்கும். இப்படிப் பொருக்கியெடுத்த கிடாய்க்குட்டி களை 18 மாதமாவதற்குமுன் பொலிச்சலுக்கு விடக்கூடாது. அப்பொழு தும் கூட கொஞ்சம் கொஞ்சமாகப் பொலிச்சலுக்கு விட்டு. கடைசி யாக 40 ஆடுகளுக்கு ஒரு கிடாய் வீதம் இருக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். நன்றாய் முதிராத கிடாய்க்குட்டிகளை பொலிசசலுக்கு விடுவதனால்தான் இத்தேசத்து ஆடுகள் இளப்பமாய் இருக்கின்றன.

இதன் பிறகு கவனிக்கவேண்டிய விஷயம் மந்தையின் மேற்பார் வைக்கு வேண்டிய ஏற்பாடுகள்.

ஆடுகளுக்கு இருப்பிடம் அமைப்பது அவசியம். இத்தேசத்தில் சாதாரணமாய் இது வழக்கமில்லை. பகலில் மேய்ச்சலுக்குக் கொண்டு போவதும் இராத்திரி ஊர்ப் பக்கத்திலுள்ள ஒரு வெம்பரப்பான இடத்தில் நரி கள்ளர் விழுந்து இலேசாய் அடித்துக்கொண்டுபோக முடியாதபடியுள்ள கள்ளிவேலி அடைப்பில் மந்தைகளை மறிக்கிறார்கள்.

இவ்விராஜதானியில் ஆடுகள் சாவதற்கு முக்கிய காரணம் அதிக ஜலதோஷ இருமலுடன் கூடி சுவாசக்கருவி புண்ணாய் உலந்துபோய் வருத்தத்தை விளைவிக்கிற "நியூமோனியா" என்றவியாதி. இந்தவியாதி வருவதற்குக் காரணம் மந்தைகளை குளிர் கூதல் பனி மழைகளில் விட்டு வைப்பதுதான்.

1916-1917-ம் வருஷத்தில் பல்லாரி, கடப்பை கர்னூல் ஜில்லாக்களில் அநேகம் ஆடுகள் இவ்வியாதியினால் மடிந்தன. ஒரு நாள் இராத்திரி பூராவும் மழையில் அடிபட்ட ஒந ஆட்டு மந்தையில 100 க்கு 20 மறுநாளே இவ்வியர்தியினால் இறந்துபோய்விட்டன.

தவிரவும் சிலுசிலுப்பான ஈரத்தரையில் படுத்துக்கிடக்கிறதனால் கறக்கும் ஆடுகள் அடிக்கடி பால் கட்டி மடி வீங்கி கஷ்டப்படுகின்றன.

இதனால் குட்டிகள் ஜலதோஷ இருமலால் அதிகமாய் மாண்டுபோகின்றன. அல்லது அவைகள் குன்றிக் குறுகிப்போய் பின்னால் வளர்வதே இல்லை.

ஆட்டைப்பின் வடபக்கத்தில் மண்சுவர்ச்சாலையொன்று கட்டி மந்தையை அடைத்துவைத்தால் மேற்சொன்ன காரணங்களால் உண்டாகும் சாவுகள் ஏற்படா. மண்சுவர் 4 அடிக்குமேல் இருக்கவேண்டியதில்லை. மூன்று பக்கங்களில்மட்டுமே சுவர் இருந்தால் போதும். மேற்கூரை அதிக உயரமன்றியில் காற்றுமழை உள்ளே அடியாதபடி தாழ்ந்து இருக்கவேண்டும்.

மந்தை சிறியதானால் சாலை கட்டுவதில் கவனிக்கவேண்டிய விஷயம் முக்கியமாய் காற்று மழை அடிக்கும் பக்கத்தில் சுவர் அவைக்க வேண்டும்.

பெரிய மந்தைகளுக்கு மூன்று பக்கங்களில், சுவரை அனுசரித்துக் கூரை போடவேண்டும. தென்பக்கம் திறந்தவெளியாயிருக்கவேண்டும்.

மந்தை அடையும் அடைப்பு, பூமி மட்டத்தைவிடச் சற்று உயர்ந்திருக்கவேண்டும். சாலையின் தளவரிசை பின்னும் கொஞ்சம்கூட உயர்ந்திருக்கவேண்டும். தெண்டக்கமுள்ள திறந்தவெளி கொஞ்சம் விலாசமாய் இருக்கவேண்டியதவசியம். ஏனென்றால் சாலையுள், மழை காலத்தில் தவிர மற்றக்காலத்தில் ஆடுகள் அடைபடாது.

100 ஆடு அடைப்பதற்கு 40 அடி நீளமும் 12அடி அகலமும் உள்ள சாலைவேண்டும். சிறு மந்தைக்கு மேற்கண்ட படத்தில் காட்டியிருக்கிறபடி A லக்கமிட்ட பாகத்தில்மட்டும் சாலை அமைத்தால் போதும். சுமார் 200, 300 ஆடுகள் உள்ள மந்தைக்கு இத்துடன் B லக்கமிட்ட சாலையும் சேர்த்துப்போடவேண்டும்.

(தொடரும்.)

Printed at the Alexandra Press, Kumbakonam and Published by Mr. Rao Sahib C. R. Lakshmivaraha Ayyangar, B.A., B.L., & Mr. R. Srinivasa Ayyangar, B. A., for The Agricultural Association, No. 5, Cutchery Road Kumbakonam.